பாலர் கல்வி

தொகுதி 28	சோபகிருதுஸ்ரீ மார்கழி - தைமீ 1964 ஜனவரி	பகுதி 10

கல்விச் செல்வம்

சமூகத்தின் செல்வம் சிறுர்கள். இச் சிறுர்கள் நாட்டிற்குத் தரம்படப் பணியாற்றவேண்டுமாஞல், இவர்கள் கல்வியை நன்கு பெறவேண்டும். ஆதலால் கல்விச் செல்வம் ஒன்றே சமூகத்திற்கு அவசியமான செல்வமாகும். இக் கருத்தினை மனத்துக் கொண்டு உலகில் முற்போக்கான நாடுகள் யாவற்றுள்ளும் பள்ளிகளிற் கற்பிக்கப்பெறும் பாடங்களைச் செவ்வனே கற்பிக்கத் தீவிரமான முயற்சிகள் செய்துவருகின்றனர். அறிவும் ஆற்றலும் வாய்ந்த பெரியோர்கள் பாட திட்டங்களையும் கல்வி முறைகளையும் ஆய்ந்து வருகின்றனர். நாகரிகம் ஓங்கிவரும் இக்காலத்தில் சமூக விஞ்ஞானம் முதலிடம் பெற்றுள்ளது; ஆதலால் விஞ்ஞான அறிவை எவ்வாறு பள்ளிக்கூடங்களிற் பெருக்கலாம் என்று ஆராய்ந்து வருகின்றனர் மேஞட்டுப் பெரியோர்கள். உயர்நிலைப் பள்ளிகளிலே இதுவரையிற் கற்பித்து வந்த விஞ்ஞானத்திற்கும் இனிக் கற்பிக்க இருக்கும் விஞ்ஞானத்திற்கும் மாறுபாடு ஏற்படும்; கற்பிக்கும் முறைகளிலும் மாறுபாடு ஏற்படும். விஞ்ஞானம் கற்பிக்கப் பயன்பெறும் உபகரணங்கள் நம் நாட்டுப் பள்ளிகளிலே போதிய அளவிற்கு இல்லை; பெரும்பான்மையான பள்ளிகளில் இவை காணப்பெறுவதுமில்லை. ஒவ்வொரு பள்ளியிலும் சிறுர்கள் சேர்ந்து ஆராய்ச்சி செய்வதற்குப் போதியவாறு உபகரணங்கள் வேண்டும். இவற்றுள் சிலவற்றைப் பள்ளிகளிலே மாணவ மாணவியரைக் கொண்டே செய்துகொள்ளலாம். இதற்கான ஏற்பாடுகளை ஆசிரிய ஆசிரியைகள் அரசியலாரது உதவியைக் கொண்டு செய்தல் அவசியமாகும்.

விஞ்ஞானம் கற்பதற்கு அவசியமானது கணிதமாகும். கணிதத்தின் தரம் அண்மையில் நம் நாட்டிற் குறைந்து வந்துள்ளது, கற்பிப்பதும் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியதாக இல்லை. நாணயங்கள், நிறையளவு முதலியன தசம முறையில் வழங்கி வருவதால் அங்க கணிதத்தில் கற்கவேண்டியது மிகக் குறைவாகும். ஆதலால் கணக்கின் தரத்தை உயர்த்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதுகாறும் கற்பித்துவத்த பகுதிகளிற் பயனற்றவற்றை அறவே யகற்றி, உயர்தரக் கணிதத்திற் சில பகுதிகளைக் கற்பித்தால் தரம் உயரும். இந்த வகையிலே வெளிநாடுகளிலும் நம் நாடுகளிலும் ஆலோசனை செய்து வருகின்றனர் பெரியோர். கற்பிக்கவேண்டிய விஷயங்களில் ஏற்படும் மாறுபாடுகளையும், இவைகளைக் கற்பிக்கும் முறையையும் பற்றி முதன் முதலாக ஆசிரியர் நன்குணரவேண்டும்; இதற்கான பயிற்சிக் கூட்டங்களும், மறு

மலர்ச்சிக் கூட்டங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும். அவசியமாக இப்பேரதே செய்யவேண்டுவது இப்போது பயன் பட்டுவரும் மெட்ரிக் முறையை எவ்வாறு பள்ளிகளிற் கற்பிப்பது, பயன்படும் அளவினங்கள் யாவை என்பனவற்றை ஆசிரியர்கட்கு உணர்த்துவதேயாம். மெட்ரிக் முறையைத் தவிர வேறென்றும் பள்ளிகளிற் கற்பிக்கக் கூடாது என்று அரசியலார் உத்தரவிட்டுள்ளனர்; இம் முறையில் பயன்பெறும் அலகுகள் யாவை, இவற்றுள் அவசியமானவை யாவை—இவை போன்றவற்றை ஆசிரியர்களும் நன்குணர வாய்ப்பு வேண்டும். அநுபவமும் ஆற்றலும் வாய்ந்த ஆசிரியப் பெரியோர் இது பற்றி ஆலோசனை செய்து, உடனடியாகச் செய்யவேண்டுவனவற்றை எடுத்துரைக்குமாறு வேண்டுகின்றனம்.

நம் தலைவரின் மறைவு

ஆசிரியர் சமூகம் தனது அருந் தலைவரை இழந்து தவிக்கின்றது. தமது வாழ்நாள் முழுவதையும் கல்விக்கும் ஆசிரியர்க்கும் அர்ப்பணம் செய்த உத்தமர் மறைந்துவிட்டார். கடைசி நிமிடம் வரையிற் கல்விக்கே பணியாற்றிய பெரியார் புகழுடம்பு பெற்றார். உயர்திரு டி. பி. ஸ்ரீநிவாஸவரதன் அவர்கள், டிசம்பர் 23–ஆம் நாள் மாலை 2-30 மணிக்குக் கூடக் கல்வி சம்பந்தமான புள்ளி விவரங்கள் சிலவற்றை ஆராய்ந்து வந்தார்; தொலை பேசியில் விவரங்கள் சில கேட்டார்; 4 மணிக்கு அவர் மாரடைப்பால் இறந்தார் என்று கேட்டு யாவரும் திடுக்குற்றோம்.

திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியில் 1926–ஆம் ஆண்டில் ஆசிரியராக வேலையில் அமர்ந்த இவர், 1947ஆம் ஆண்டு தலைமை ஆசிரியர் பணியேற்று, பள்ளிக்காக நன்குழைத்துப் பல வகைகளிலும் பள்ளியின் நிலையை உயர்த்தி வந்தார். 1926–ஆம் ஆண்டு முதல் சென்னை ஆசிரியர் சங்கத்திற் தொடர்பு கொண்டு, ஆசிரியர்களது நிலையை நன்கு அறிந்து, இந்த நிலையை உயர்த்துவதற்கு உயர்திரு சபேசன், உயர்திரு யக்ஞநாராயண அய்யர் முதலியோருடன் உழைத்துப் பெருமுயற்சி கைக்கொண்டார். பின்னர் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் செயலராக நெடுங்காலம் பணியாற்றிக் கடைசியில் அதன் தலைவராகவும் திகழ்ந்தார். தன்னலம் பேணுமற் பிறர்க்கே உழைக்கும் பண்பு .வாய்ந்த இவர் சென்னை சட்டசபை உறுப்பினராகத் தேர்வு பெற்று ஆசிரியரது நிலையை எடுத்தோதி, இந்நிலையை உயர்த்துவதற்குப் பெருமுயற்சி செய்தார். யாவர்க்கும் அஞ்சாமல் விஷயங்களை எடுத்துக் கூறும் பண்பு வாய்ந்தவராதலால், இவர் யாவராலும் பாராட்டப்பெற்றார். எதிர்ப்பு எவ்வளவு இருந்தாலும், மனந்தளராமல் தாம் ஏற்றுக்கொண்ட பணியை வெற்றியுறச் செய்வது இவரிடம் நாம் கண்ட தொன்றாகும். தனிப்பட்ட தொகுதியொன்று ஆசிரியர்க்குத் தேவை என்பதை இவர் அண்மையில் வெளியிட்டது இவருடைய விடாமுயற்சிக்கு எடுத்துக் காட்டாகும். இவரது அநுபவத்தையும் உழைப்பையும் நன்குணர்ந்த தாயகம், இவரைச் சென்னை மாநிலக் கல்வி

மாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்து இவரைக் கௌரவித்தது.

இவரது பிரிவால் வருந்தும் ஆசிரியர் சங்கங்கள் பல, அநுதாபக் கூட்டங்கள் கூடித் தமது அநுதாபத்தை இந்து உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கட்கும், தென்னிந்தியர் ஆசிரியர் சங்கத்தினர்க்கும், இவரது குமாரர்கட்கும் அனுப்பியுள்ளன. இந்த விசனத்தில் ஆழ்ந்துள்ள எமக்கு ஆசிரிய உலகம் அனுப்பும் அநுதாபச் செய்திகள் ஒருவாறு ஆறுதலை அளிக்கின்றன.

சென்னை ஆசிரியர் சங்கம், தென்னிந்தியா ஆசிரியர் சங்கம்-இவற்றின் ஆதரவில் நடந்த பொதுக்கூட்ட மொன்றில் 6-1-64இல் இந்து உயர்நிலைப்பள்ளியில் இவரது மறைவைப்பற்றி ஆசிரியர் பலர் பேசி, அநுதாபத் தீர்மானத்தை இவரது குடும்பத்தினர்க்கு அனுப்பத் தீர்மானம் செய்துள்ளனர்.

சுவாமி விவேகானந்தரின் தாய்நாட்டுத் திருப்பணி

இத்துறவு வேந்தனது தேசப்பற்று ஆத்மீக அனுபூதியை அடிப்படையாகக் கொண்டது. விவேகானந்தர் உண்மையைக் கண்டவர், ஓர் தீர்க்கதரிசி, தமது குருவான ராமகிருஷ்ண பரமஹம்சரது திருப்பணியைச் செவ்வனே செய்து வைக்க வந்த உத்தம புருஷரே நமது சுவாமி அடிகள். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரிடம் தாம் பெற்ற உபதேசங்களை அவர் மறைந்த பிறகு செயலிலே பரிணமித்து இப்பெருத்த ஸ்தாபனத்தை வாழையடிவாழையாக வாழ்ந்து வர அஸ்திவாரமிட்டுச் சென்றார்.

தமது குருநாதரின் மறைவுக்குப் பிறகு பாதசாரியாகத் திரிந்தபொழுது இந்தியாவின் ஏழ்மை, பிற்போக்கான நோக்கம், மதச் சண்டை சச்சரவுகள், செயலிலே ஊக்கமின்மை, உயர்ந்தோர் தாழ்ந்தோர் வேறுபாடுகள், ஜாதி வேற்றுமைகள் போன்ற நடமாடும் பேய்களைக் கண்டார். சுவாமிகளின் மனம் கொதித்தெழுந்தது. மனிதரிடம், தெய்வீகத் தன்மையைப் பார்க்கும் உத்தம புருஷரல்லவா அவர்? எவ்வாறு இவைகளைக் கண்டு சகிப்பார்? எந்நாடுகள் ஆத்மீகச் செல்வத்தைக் குறித்துப் பறைசாற்றுகின்றனவோ அந்நாட்டிலா இந்தப் பரிதாபகரமான நிலைமை என நினைத்து நினைத்து மனமுருகினார். எவ்வாறு கண்ணீர் வடிக்கும் தமது தாய்நாட்டின் துயரத்தைத் தீர்ப்பது, சாய்ந்து கிடக்கும் நாட்டை எவ்வாறு தலைநிமிர்ந்து நிற்கச் செய்வது என்ற எண்ணம் அவரை இடைவிடாது குடிகொண்டது. மன்னவனது மாளிகையிலும், ஏழையினது குடிசையிலும் வாசம் செய்து நாட்டை நன்றாக உணர்ந்து கொண்டார்.

வறுமையைப் போக்கி நாட்டைத் தட்டி எழுப்பவேண்டும். மக்கள் சோம்பலாலும், பலவீனத்தாலும், மனவலிமை குன்றிச் சோர்ந்துள்ளனர். அவர்களுக்கு ஊக்கம் காட்டி உற்சாகப்படுத்த வேண்டும். இது சுலபமான காரியம் அல்ல. இதற்குப் பண உதவியும், மனித உதவியும் தேவை. இதை நிறைவேற்றச்சுவாமிகள் அமெரிக்காவில் அப்பொழுது நடக்க விருந்த சர்வமத சபையில் கலந்துகொள்ளத் தீர்மானித்தார். மேலை நாட்டில் இந்து தர்மத்தின் உயர்ந்த கருத்துக்களைப் பரப்பி, இந்தியப் பணிக்குப் பொருளுதவி பெற உத்தேசித்தார்.

சுவாமிகளின் திட்டம் கன்யாகுமரியில் உருவானது. அவர் கடலின் மத்தியிலுள்ள பாறைக்கு நீந்திச் சென்று ஆழ்ந்த தியானத்தில் இருந்தபொழுது மனத்தின்கண் பல எண்ணங்கள் தோன்றின. சுய நலம் கருதாது உலக வாழ்க்கையைத் துறந்து ஆத்ம ஞானத்தைத் தேடிக்கொண்டு எவ்வளவு சந்நியாசிகள் நமது நாட்டிலே காடுகளிலும், குகைகளிலும் திரிந்து வருகிருர்கள். அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி இந்தப் பாமர மக்களுக்குச் சுலபமான வழியில் அறிவு புகட்ட முன் வந்தால் எவ்வளவு உபயோகமாக இருக்கும். கிராமத்திற்குச் சென்று அவர்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும். இதன் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக நாடுஅபிவிருத்தி அடையும். இவ்விதம் செய்வதன் மூலம் இச்சுய நலமற்ற சந்நியாசிகள் தங்களது முக்தியைத் தேடிக்கொள்கின்றனர். **தியாக புத்தியோடு கூடிய திருப்பணியின் மூலம் முக்தி என்பதான ஒரு மூல மந்திரத்தைக் கண்டு பிடித்தார்.** இதை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்டதே ராம கிருஷ்ண சங்கம்.

அமெரிக்கா சென்று, சர்வமத சபையிலே வெற்றி வீரராக முடிசூடி அமெரிக்கா தேசத்தையே தமது பேச்சுவன்மையாலும், இந்துமத உண்மைகளைப் போதிப்பதாலும்வென்று சுமார் மூன்று வருஷகாலத்திற்குப் பின் நாடு திரும்பிய இத்தவப் புதல்வரைத் தாய்நாடு ஆசி கூறி வரவேற்றது. கொழும்புவிலிருந்து அல்மோராவரை இந்த வேதாந்த சிங்கம் கர்ஜித்தது. ''எழுந்திருங்கள்! தூங்கியதுபோதும். இனிச் சமயமில்லை. உலகமே நம்மை எதிர்பார்த்து நிற்கிறது'' எனக் கூவி அழைத்தார். அவரது சீரிய எண்ணங்கள் மக்களைக் கவர்ந்தன. பலர் அவரைப் பின்பற்ற முன் வந்தனர்.

தனி மனிதனால் பெருத்தகாரியங்களைச் சாதிக்க முடியாது. அதற்கு ஒரு ஸ்தாபனம் தேவை. ஆக, சுவாமிகள் இந்தத் திருப்பணியைச் செவ்வனே செய்ய இந்த ராமகிருஷ்ண மடம் என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அதற்குண்டான விதிகள், நடைமுறை முதலியவற்றை வகுத்துத் தந்தார். இந்த ஸ்தாபனத்தின் நோக்கம் தியாகிகளைத் தயாரித்தல், அவர்கள் மூலம் தேசத்திருப்பணி புரிதல்.

சமுதாயத்தில் மக்களிடையே காணக்கூடிய வறுமைகளைப் பொருளின்மை, கல்வியின்மை, பண்பாட்டுக் குறைவு, ஆத்மீக மின்மை என்பதாக நான்குவிதமாக வகுக்கலாம். இவைகளைப் போக்க வேண்டியதே இந்தஸ்தாபனத்தின்குறிக்கோள். இது நோய்வாய்ப்பட்டுள்ளோர்க்கும் ஏழை எளியவர்க்கும் அவர்கள் குறையை நீக்க உதவல், ஆண்மை தரும் கல்வியைப் புகட்டக் கல்வி ஸ்தாபனங்கள் அமைத்தல், இந்து தர்மத்தின் கலாசாரத்தைப் போதிப்பதின் மூலம் பண்பாட்டைப் பரப்பல், ஆத்மீகத் தாகம் கொண்டோருக்கு ஆத்மீகபோதனை தருதல் என்ற திருப்பணிகளை மேற்கொண்டுள்ளது. இத்திருப்பணிகளின் மூலம் தியாகிகள் தங்களது வாழ்வைப் புனிதமாக்கிக்கொள்வர். இதை வெறும் சமூகத் தொண்டு ஸ்தாபனமாகவோ, அரசியலோடு இணைந்ததாகவோ கருதக் கூடாது. இது தனிப்பட்ட சுதந்திரத்தோடு கூடியதொரு ஸ்தாபனம்.

பெண்களின் முன்னேற்றத்திற்காக வேண்டிச் சுவாமிகள் ஒரு தனி ஸ்தாபனத்தைத் துவக்கத் திட்டமிட்டிருந்தார். அது அவர் வாழ்நாளில் கைகூடவில்லை. அவர் மறைந்து அநேக வருஷங்களுக்குப் பிறகு 1954ல் கல்கத்தாவில் பெண்களுக்காக ஒரு தனி ஸ்தாபனம் அமைக்கப்பட்டுள்ளது.

நம் நாடு பொருளாதாரத்தில் உயர்வடையச் சுவாமிகள் வழி வகுத்துத் தந்தார். நாம் நமது ஆத்மீகப் பொக்கிஷத்தை மேலே நாட்டாருக்குக்கொடுத்து அவர்களிடமிருந்து கைத்தொழில்,இயந்திரம் முதலியவைகளைப் பெறுதல்வேண்டும். அதுவே நமது பொருளாதார அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும் எனக் கருதினர். அதைப் பின்பற்றி இப்பொழுது நாம் எவ்வளவு முன்னேறியுள்ளோம் என்பது சொல்லாமலே விளங்கும். தேச சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களான காந்தியடிகள், சுபாஷ் சத்திரபோஸ் முதலியோர் சுவாமிகளின் கொள்கைகளை நன்ருகப் படித்துப் புரிந்துகொண்டு தமது கருமத்திலே வெற்றி கண்டார்கள்.

சுவாமிகளுக்குத் தமது தாய்நாடு ஒரு விலையில்லா மாணிக்கமாகத் திகழ்ந்தது. அதனிடம் அளவிலாப் பக்தி கொண்டிருந்தார். அமெரிக்காவிலிருந்து திரும்புகையில் அவர் கூறிபதாவது: "முன்பு எனக்குத் தாய்நாட்டின் மேல் அன்பும், பக்தியும் இருந்தன. இப்பொழுது அதனுடைய தூசுத்துளியே புனிதமானது". தாய்நாட்டின் நிலைமையைக் கண்டு பல தடவை கண்ணீர் வடித்துள்ளார். அமெரிக்காவிலே தாம் சர்வமத சபையில் வெற்றி வீரராகத் திரும்பிய தினத்தன்று இரவு இவருக்கு ஒரு தனவான் உபசாரம் செய்து அழகாக அலங்கரித்த ஒரு அறையைத் தங்குவதற்காகத் தந்திருந்தார். அன்றிரவு தமது தாய் நாட்டின் வறுமையை நினைத்து உருகிக் கண்ணீர் கசிந்தார். ஆடம்பரமான படுக்கையை விட்டுத் தரையிலேயே படுத்து இரவைக் கழித்தார். ஆ! இவரல்லவோ ஏழையின் நண்பர்! தாம் அமெரிக்கா செல்வதற்கு முன் தமது சகோதர சிஷ்யர் ஒருவரிடம் கூறுகிருர்: "சகோதரா, உனது மனம் வெகு விசாலமாகி விட்டது. எனக்கு உங்களது மதம் என்ருல் ஒன்றும் புரியவில்லை. இந்த ஏழை எளியோருக்கு ஏதாவது செய்ய முடியுமா? அதுவே மிக அவசியம். நான் இப்பொழுது அவர்களுக்காக மனமுருகக் கற்றுக் கொண்டேன்."

வெறும் வயிற்றிலே வேதாந்தம் நடக்காது. மக்கள் வறுமையால் வாடுமிடத்து அவர்களுக்கு வழி காட்ட வேண்டுவது அவசியம். மதம் அனுஷ்டானம் எல்லாம் அதன்பின் தொடரும். ஆகவேதான் சுவாமிகள் கர்மத்தில் அதிக ஊக்கம் காட்டினர். அவர் அடிக்கடி கூறுவார்: "உடலுறுதியோடும், ஊக்கத்தோடும், உள்ளத்தோடும் நாம் கருமத்தைச் செய்யவேண்டும். கருமமே கடவுள். இன்னும் 50 வருஷங்களுக்கு எல்லாக் கடவுளரையும் மறந்து தாய்நாட்டின் வறுமையைப் போக்க முன்வரவேண்டும்."

இந் நன்னுளிலே நாம் சுவாமிகளின் வழியைப் பின் பற்றி, நமது வாழ்க்கையை இன்புறச் செய்ய முயலுவதே நாம் அவருக்குச் செலுத்தும் வணக்கமாகும்.

—By பிரம்மசாரி ஹரிசைதன்யா.

முதல் ஐந்து வகுப்பு வரையில் இலக்கணம் போதித்தல்

(By Sri Ekambara Iyer, Tamil Pandit, P. S. High School)

சொற்றொடர்களும், வாக்கியங்களும்

முதல் வகுப்புச் சிறுவர்கள் படங்களின் மூலம் தாங்கள் அறிந்த பொருள்களின் பெயர்களைத் துணையாகக் கொண்டு எழுத்துக்களை எழுதவும், அவ்வெழுத்துக்களைக் கொண்டு சொற்கள் உண்டாக்கிப் படிக்கவும் கற்றுக் கொண்டிருப்பார்கள். நாளடைவில் இரண்டு அல்லது மூன்று சொற்களைக் கொண்டு வாக்கியம் ஆக்கி அதை எழுதவும் படிக்கவும் கற்பிக்கப் பெறுவார்கள். பின் தரப்படும் விஷயங்களை அவர்கள் கவனிக்கட்டும்.

'வருகிறேன்' என்ருல் வருவது யார்? நான். வருகிறேன் என்று சொல்வதற்கும் நான் வருகிறேன் என்று சொல்வதற்கும் பொருள் ஒன்றே. அங்ஙனமே போகிருேம், சிரிக்கிருய், ஆடுகிறீர்கள், தின்ருன், பேசினுள், ஏறுகிருர்கள் என்பவற்றுள் ஒவ்வொரு செயலையும் செய்வது யார் என்று கேட்டால், நாம் போகிருேம், நீ சிரிக்கிருய், நீங்கள் ஆடுகிறீர்கள், அவன் தின்ருன், அவள் பேசினுள், அவர்கள் ஏறுகிருர்கள் என்று விடை கிடைக்கும். அன்றியும், எது வருகிறது, எவை ஓடுகின்றன என்று கேட்டால் அது (வண்டி) வருகிறது, அவை (குதிரைகள்) ஓடுகின்றன என்று விடை கிடைக்கும். பையன் யாரைப் பார்க்கிருன், மாடு எதை மேய்கிறது என்ற கேள்விகளைக் கேட்டால் பையன் (அவன்) தாயைப் பார்க்கிருன், மாடு (அது)புல்லை மேய்கிறது என்று விடை கிடைக்கும். வாக்கியத்தின் முக்கிய பிரிவுகளான எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்பவைகளைச் சொல்லாமலேயே அவை அடங்கப்பெற்ற சிறு வாக்கியங்களை எழுதவும் படிக்கவும் செய்யலாம். ஒரு சில உலக நீதிச் செய்யுட்களை மனப்பாடம் செய்து திருப்பிச் சொல்லச் செய்யலாம்.

இரண்டாம் வகுப்பில் சிறுவர்களுக்கு இன்னும் இரண்டொரு வார்த்தைகள் அதிகம் வரும்படியான வாக்கியங்களை எழுதவும் படிக்கவும் கற்பிக்கலாம். கோபாலனும் கோவிந்தனும் வந்தார்கள் என்னும் வாக்கியத்தில் மூன்று சொற்களும், நீ இன்று சம்பளம் கட்டவேண்டும் என்ற வாக்கியத்தில் நான்கு சொற்களும் காணப்படுகின்றன. சொற்கள் இரண்டும் பலவும் ஒன்றை ஒன்று தொடர்ந்து வருவதால் அவற்றின் தொடர்ச்சியைச் சொல் தொடர் என்று கூறுவோம். பின் வரும் சொல் தொடர்களைச் சற்றுக் கவனிக்கச் செய்யவும். வண்டி வந்து, வண்டி வந்து நின்றது என்ற சொல் தொடர்கள் இரண்டினுள்ளும் முன்னது அர்த்தம் பூர்த்தியடையவில்லை, பின்னது அர்த்தம் பூர்த்தி யடைந்துள்ளது என்பதை அறிவிக்கவும். அர்த்தம் பூர்த்தி பெருதது எச்சச் சொல் தொடர் என்றும், அர்த்தம் பூர்த்தி பெற்றது முற்றுச் சொல் தொடர் என்றும் கூறப்படுவதை மனத்தில் கொள்ளும்படி செய்யவும். ஆத்திச்சூடி நூலிலிருந்து சில வரிகளை மனப்பாடம் செய்யச் சொல்லலாம். வாக்கியத்தின் முப் பிரிவுகளான

எழுவாய் முதலிய பெயர்கள் இவ் வகுப்பிலும் கூறப்பட வேண்டா.

மூன்ருவது வகுப்புப் பிள்ளைகள் மேலும் இரண்டொரு சொற்கள் அதிகம் சேர்ந்த வாக்கியங்களை எழுதலாம், படிக்கலாம். வாக்கியத்தில் வரும் சொற்களில் ஒன்று செயலை உணர்த்தி நிற்பதை அவர்கட்குச் சுட்டிக் காட்டி, அந்தச் சொல்லைப் பயனிலை என்று கூறச் சொல்லவும். பயனிலையாகிய அந்த ஈற்றுச் சொல்லை ஆதாரமாகக் கொண்டு, அதனோடு யார் அல்லது எது என்ற கேள்விச் சொல்லை வைத்துக் கேள்வி கேட்டால், செயலைச் செய்தவர் அல்லது செய்தது விடையாகக் கிடைக்கும். விடையாகக் கிடைத்த அச் சொல்லே எழுவாய் என்று கூறப்படவேண்டும் என்று சொல்லவும். பயனிலையாகிய அந்தச் சொல்லுக்கு முன் யாரை அல்லது எதை என்ற கேள்விச் சொல்லை வைத்துக் கேள்வி கேட்டால் விடையாக வரும் சொல்லே செயப்படு பொருளாகும் எனக் கூறவும். சில கேள்விகளுக்கு விடையாகச் செயப்படு பொருள் கிடைப்பதில்லை. சில வாக்கியங்களுக்குச் செயப்படு பொருள் உண்டு, சில வாக்கியங்களுக்கு அது இல்லை என்று தெரிவிக்கவும். கீழ்வரும் வாக்கியங்களில் எழுவாய் முதலிய மூன்றையும் கேள்விகள் மூலம் கண்டறியலாம். 1. குரங்கு கிளையை அசைத்தது-இவ்வாக்கியத்தின் ஈற்றில் முடிவுச் சொல்லாய் நிற்பது எது என்று கேட்கவும். விடை—அசைத்தது. அதுவே பயனிலை யாகும். பிறகு கிளையை அசைத்தது எது என்ற கேள்வியை எழுப்பவும். குரங்கு என்னும் சொல் விடையாகக் கிடைக்கும். குரங்கு என்பது எழுவாயாகும். குரங்கு எதை அசைத்தது என்ற கேள்விக்குக்கிளையை என்பது விடையாகும். கிளையை என்பது செயப்படு பொருளாகும். 2. குரங்கு எழுந்து நின்றது என்னும் வாக்கியத்தில் செயப்படு பொருள் வரக் கேள்வி கேட்டால், கேள்வியே நன்ருக இல்லை, விடையும் கிடைக்காது. எனவே இவ் வாக்கியத்தில் செயப்படு பொருள் இல்லை என்று அறிவிக்கவும். கொன்றை வேந்தன் என்னும் நூலில் உள்ள ஓரடிச் செய்யுட்கள் சிலவற்றைப் பிள்ளைகள் மனப்பாடம் செய்யலாம்.

நான்காவது வகுப்பில் சிறுவர்கள் வாக்கியங்களில் உள்ள எழுவாய்க்கும் பயனிலைக்கும் உள்ள பொருத்தங்களை அறியவேண்டும். எந்தத் திணை, பால், எண், இடங்களில் எழுவாய் வருகிறதோ அதே திணை, பால், எண், இடங்களில் பயனிலை இருக்க வேண்டுவது அவசியம். எழுவாய்க்கு ஏற்ற பயனிலை இல்லை என்ருல் அவ் வாக்கியம் தவருனது ஆகும். பிள்ளைகள் பள்ளிக்கூடம் சென்ருர்கள், நான் நன்ருகப் பாடுகிறேன் என்பவை நேரான எழுவாய் பயனிலைப் பொருத்தம் உள்ளவை. பாரி முல்லைக் கொடிக்கு உயர்ந்த தன் தேரைத் தந்தான் என்று கூறவேண்டுவதைப் பாரி முல்லைக் கொடிக்கு உயர்ந்த தன் தேரைத் தந்தார்கள் என்று கூறுவது பிழையாகும் என்பதை எடுத்துக் காட்டவும்.

வாக்கியங்களில். சில சமயங்களில், எழுவாய் மறைந்து நிற்பதுண்டு. அந்த எழுவாய்க்குத் தோன்ருு எழுவாய் என்று பெயர். இங்கே வா என்பதில் நீ என்பதும், வாருங்கள் என்பதில் நீங்கள் என்பதும், பாடுவான் என்பதில் அவன் என்பதும், ஊதுகிறேன் என்பதில் நான் என்பதும் தோன்ருு எழுவாய்களாகும் என்று அறிவிக்கவும்.

இவ்வகுப்பினர் நல்வழி, வாக்குண்டாம் என்ற நூல்களிலிருந்து சில பாடல்

களை மனப்பாடம் செய்து சொல்லவும் எழுதவும் பழகலாம்.

ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகளுக்கு வாக்கியத்தில் எழுவாய் முதலிலும், பயனிலை ஈற்றிலும், செயப்படு பொருள் இடையிலும் வருவது தான் சரியானது என்று எடுத்துச் சொல்லவும். ஒரு சில சமயங்களில், அம்முறை மாறி அவை வருவதுண்டு. சீதையைக் கண்டேன் நான், தின்றேன் பழத்தை என்பவற்றுள் எழுவாய் முதலியன இடம் மாறி வந்துள்ளன காண்க. நான் பழத்தைத் தின்றேன்—இதில் எழுவாய் பயனிலை செயப்படு பொருள்கள் சரியான இடங்களில் அமைந்திருப்பது தெரியலாகும்.

வாக்கியத்தில் வரும் பயனிலையில் மூன்று விதம் உண்டு. அவை வினைப் பயனிலை, வினாப் பயனிலை, பெயர்ப் பயனிலை ஆகும். உதாரணம் :

கண்ணன் வந்தான். (வினை); கண்ணன் யார்? (வினா); கண்ணன் ஒரு பையன். (பெயர்).

வாக்கியங்கள் பல வகைப்படும். 1. ஒருவன் தானே செய்யும் செயல் தன்வினை ஆகும். 2. பிறன் செய்யும் செயல் பிறவினை ஆகும். 3. செயப்படு பொருள் பெருத வினை செயப்படு பொருள் குன்றிய வினை ஆகும். 4. செயப்படு பொருள் கொண்ட வினை செயப்படு பொருள் குன்ருவினை ஆகும். பின்வரும் உதாரண வாக்கியங்களில் மேலே சொன்ன நால் வகை வினைகளையும் காணலாம்.

குதிரை ஓடுகிறது (தன் வினை); அவன் குதிரையை ஓட்டுகிருன். (பிறவினை); நான் எழுந்து நின்றேன். (செயப்படு பொருள் குன்றிய வினை ; பத்மினி பந்தை அடித்தாள். (செயப்படு பொருள் குன்ருவினை.)

வாக்கியங்கள் மேலும் தொடர்வதைப் பார்க்கலாம். 5. செயப்படு பொருள் உள்ள வினை வாக்கியம் செய்வினை வாக்கியம் ஆகும்.

(உ—ம்) மாடு வைக்கோலைத் தின்றது. 6. செயப்படு பொருள் எழுவாயாகி வரும் வாக்கியம் செயப்பாட்டு வினை வாக்கியம் ஆகும். (உ-ம்) வைக்கோல் மாட்டிஞல் தின்னப்பட்டது.

7. ஒரு செயல் நிகழ்வதைக் கூறுவது உடன்பாட்டு வாக்கியம் எனப்படும். (உ—ம்) ஆசிரியர் வகுப்பறைக்குவந்தார். 8. ஒரு செயல் நிகழாமையைத் தெரிவிப்பது எதிர் மறை வாக்கியம் ஆகும். (உ-ம்) நேற்று கூட்டம் நடைபெறவில்லை.

9. செய்தி வாக்கியம் ஒரு நிகழ்ச்சியைக் கூறும். (உ-ம்) கம்பர் கவி பாடினர். 10. கட்டளை வாக்கியம் ஒரு கட்டளையை உணர்த்தும். (உ-ம்) அந்தப் புத்தகத்தை எடுத்து இங்கே வை.

11. விஞவைக் கொண்டது விஞ வாக்கியம் ஆகும். (உ—ம்) அவ்வூருக்கு வழி எது? 12. ஓர் உணர்ச்சியை வெளிப்படுத்துவது உணர்ச்சி வாக்கியம் எனப்படும். (உ-ம்) பாரியின் கொடையே கொடை! 13. உவமையைக் காட்டுவது உவமை வாக்கியம் : (உ - ம்) என்பில் அதனை வெயில் காயும். 14. உவமேயத்தை அறிவிப்பது உவமேய வாக்கியம். (உ-ம்) அன்பில் அதனை அறம் காயும். 15. உருவகத்தைப் பெற்றிருப்பது உருவக வாக்கியம். (உ—ம்) வீமனுகிய சிங்கம் பகைவர்களாகிய யானைகளைக் கொன்று வீழ்த்தியது. 16. ஒரு எழுவாய்க்கு ஒரு பயனிலை வரும் வாக்கியம் தனி வாக்கியம் ஆகும். (உ-ம்) இராவணன் சீதையை அபகரித்தான். 17. ஒரு எழுவாய்க்குப் பல பயனிலைகளும், பல எழுவாய்களுக்கு ஒரு பயனிலையும் வருவது தொடர் வாக்

கியம் ஆகும். (உ-ம்)(அ) பரதன் அயோத்திக்கு வந்தான்; இராமன் அங்கு இல்லாமையை அறிந்தான்; காட்டுக்குச் சென்றான்; அண்ணனைக்கண்டான்; அவன் அடியில் வீழ்ந்தான் (ஆ) கபிலரும், பரணரும், நக்கீரரும், மற்றும் பலரும் அகப்பொருளுக்கு உரை எழுதினார்கள். 18. ஒரு தனி வாக்கியமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணை வாக்கியங்களும்சேர்ந்தது கலவை வாக்கியம் ஆகும். (உ-ம்) ஊர்போய் மறு நாள் திரும்பி வரலாம் என்று இராமன் இராவணனிடம் கூறினான். இராமன் இராவணனிடம் கூறினான். (தனிவாக்கியம்), ஊர் போய் மறுநாள் திரும்பி வரலாம் (துணைவாக்கியம்).

ஆரம்பப் பள்ளிக்கு நிரந்தரமாய் வேண்டிய துணைக் கருவிகள்

(எஸ். ஜகந்நாதன், சைதாப்பேட்டை)

முன் யோசனையுடனும் தீர்க்க தரிசனத்துடன் கட்டடம் கட்டுபவர்கள் கீழ்க் கண்ட குறிப்புக்களையும் கட்டடம் அமைக்கும் பொழுதே சேர்த்துக் கொள்வது நல்லது.

1. ஒவ்வொரு வகுப்பு அறையிலும் நான்கு பக்கச் சுவர்களிலும் குழந்தைகளின் இடுப்புக்குமேல் கைக்கு எட்டும் வரையிலும் உள்ள சம இடத்தைக் கரும் பலகையாக அமைத்துக் கொள்வது.

2. முதல் இரண்டு வகுப்பு அறைகளிலும் கூட்டல் கழித்தல் விளையாட்டுக்கு ஏற்ற சித்திரங்களை வரைந்து கொள்வது.

3. விசாலமான அறையின் சுவர்களில் சில பகுதிகளை உலகப்படம், தேசப்படம், நாட்டுப்படம் இவைகளுக்கு ஒதுக்கி ஏற்ற வர்ணங்களில் நன்றாக வரைந்து கொள்ளுதல்.

4. ஒவ்வொரு வகுப்பு அறையிலும் ஆசிரியருக்குப் பின் புறமுள்ள சுவரில் புஸ்தகம், நோட்டுப் புஸ்தகம், பகல் உணவுப் பாத்திரம், பாடப்புத்தகங்கள் போதனை துணைக்கருவிகள் வைத்துக் கொள்ளுவதற்கு ஏற்றபடி அடுக்கு மாடங்களாக அமைத்துக் கொள்ளுதல். பூட்டு சாத்து இருக்கும்படியும் அலமாரிகள் அமைப்பதும் விசேஷமே.

5. சுவரில் ஆணி அடிக்காமல் படங்கள் தொங்கவிடுவதற்கேற்றபடி மரச் சட்டங்களைப் பதிய வைப்பது ஏற்றதாகும்.

6. முதல் நான்கு அறை வாசல்படிகளிலாவது சமீபத்திலுள்ள சுவர் ஓரங்களிலாவது தரை மட்டத்திலிருந்து வாசற்படி அல்லது சுவரில் 6 அடி உயரம் வரை காண்பிப்பதற்கு ஏற்றவாறு அடி, அங்குலக் குறிப்புகள் போட்டுக் கொள்ளுவது.

நிரந்தரமாய் இருக்க வேண்டியவை:—

1. தேசீய கீதம்
2. கால சக்கரம்
3. தினசரிச் செய்திகள் பலகை
4. குளோப்
5. முகத்தலளவை (ஒரு லிட்டர், இரண்டு லிட்டர் 100, 200, 500 அளவைகள்.

6. நிறுத்தல் அளவை(கிலோ கிராம், ½ கிலோ கிராம் ; 100, 200, 50, 20, 10 கிராம் அளவைகள் தராசு உள்பட)

7. நீட்டல் அளவை (மீடர், கஜக் கோல், அரை கஜம், அட்டைகோல்)

8. 100 அடி நாடா

9. 66 அடி அல்லது 22 கஜம், சங்கிலி (100 லிங்க்ஸ் கூடியது).

10. மழை அளக்கும் கருவி.

11. பூச்சிகள் வளர்க்கும் வலைக்கம்பி, கண்ணடிப் பெட்டி.

12. நீர்வாழ் ஜந்துக்கள் வளர்க்கும் பெரிய கண்ணடி ஜாடி.

13. சோதனைக்குழாய்கள் ஸ்டாண்டு உள்பட—சாராய விளக்கு ஸ்டவ், அல்லது குமுட்டி அடுப்பு.

14. பூச்செடி, ஜாடி

15. உலகப்படம்

16. இந்தியா, புராதன இந்தியா, புராண இந்தியா.

17. சித்திரங்கள் அடங்கிய தற்கால இந்தியாப் படங்கள்.

18. மாகாணம்.

19. (View Master) வ்யூ மாஸ்டர் பூதக்கண்ணடி கருவியும், குறைந்த பட்சம் 60 படங்களும் (60 Slides.)

20. பெரிய தோட்டம் இல்லாக் குறைக்குக் குறைந்தது 100 பூந்தொட்டிகள் ; 10 நாற்றுவிடும் அகலவட்டத் தொட்டிகள்.

21. ஒரு அடி சதுரம் ஒரு சதுர அடியைக்காட்டும் ஒரு துத்த நாகத் தகடு. அதன் ஒருபுறம் 142 சதுர அங்குலங்களாக வரைந்து இருத்தல் நலம்- ஒட்டுப்பலகையிலும் இருக்கக்கூடும்.

22. ஒட்டுப் பலகையில் ஒரு சதுர கஜத்தைக் காட்டும் ஒரு பலகை. இப் பலகையின் ஒரு பக்கம் 9 சதுர அடிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது நலம்.

முதல் வகுப்புக்கும், மற்றும் அதற்கும் கீழுள்ள வகுப்புகளுக்கும் இன்றியமையாதவை

1. விளையாட்டு (ரப்பர் பந்துகள்—வர்ணப் பூப்பந்துகள்)

2. மணல் விளையாட்டு (ஆடும் குதிரை, படகு, மோட்டார், வாத்து)

3. புலன்கள் பயிற்சி

4. சிறுவர் கைவேலைப் பயிற்சி

5. சிற்றுண்டித் தட்டங்கள்

தண்ணீர் குடிக்கும் டம்ளர்கள்

7. கைக்குட்டைகள்

8. சித்திரம் வரையும் பலகைகள்

9. தண்ணீர் ஊற்றும் கை வாளிகள்

10. பொம்மைகள்

11. விளையாட்டுச் சாமான்கள்

12. தள்ளுவண்டி

13. சக்கரம் வைத்த மிருக வகைகள்

14. உட்காரும் பாய்கள்

15. தூங்கும் பாய்கள்

16. கதைப் படங்கள்

17. பாஷைப் பயிற்சிப் பலகைகள்

18 குழந்தைப் பாட்டும் படங்களும்

19. கணிதப் பயிற்சிக்கு ஏற்ற பலகை மணிச்சட்டங்கள்

20. கணிதப் பயிற்சி விளையாட்டுக்களுக்கு ஏற்ற சித்திரப் பலகைகள்

21. கணிதப் பயிற்சிப் படப் புத்தகங்கள், கையினல் எழுதப்பட்ட விசித்திரப் புத்தகங்கள்

ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆங்காங்கு மத்திய துணைக் கருவித் தொழிற்சாலை ஏற்படுத்துவது பொருந்தும். அதன் சார்பாகக் கிளைச்சாலைகள் தோற்றுவதும் உசிதம்.

மற்றொரு வகுப்பு அறையின் தரையில் சொற்களை இனவாரியாகப் பிரிப்பதற்கேற்ற சித்திரங்கள் வரையப்பட்டிருப்பது ஏற்றதாகும். (உம்) மயில், மலர்ந்த தாமரைப் பூ, ஆலம் விழுதுகள், அவரைக் கொடி, பனை ஓலை விசிறி, வேப்பம் இலை, மரம், கோபுரம், புதை (மத்தாப்பூ) வாணம், மலர்களுடன் பழம் முதலியன.

போதனாமுறைச் சாதனங்கள்

வகுப்பு 1 முதல் 5 முடிய

தனித்தனியே பயிற்சி பெறவும் கூட்டுமுறையில் சகபாடிகளுடன் விளையாடிப் பயிற்சி பெறவும், தனித்தனியே தேர்ச்சி பெறவும் இச்சாதனங்கள் நன்கு பயன்படும்.

பாஷை:

வார்த்தைகள் அடுக்கும் பெட்டி, எழுத்துக் கோக்கும் பலகை, சொல் பெருக்கம் சம்பந்தமான சித்திரப் பலகைகள்:

1. குறில் நெடில், 2. எதிர்ப்பதம், 3. ஆண் பெண் பதங்கள், 4. லகர ளகர பேதங்கள், 5. லகர, ளகர, ழகர, பேதங்கள், 6. யகர, ரகர, ழகர பேதங்கள், 7. னகர, ணகர பேதங்கள், 8. ரகர, றகர பேதங்கள், 9. ஒற்று தோன்றுதலும் நீங்குதலும், 10. கூட்டுச் சொற்கள் பல வகைகள், 11. சொல் பல, பொருள் ஒன்று, 12. சொல் ஒன்று, பொருள் பல, 13. அடுக்குப்பதங்கள், எதிர்நிலை, சமநிலைப் பதங்கள், 14. ஒலிக் குறிப்புப் பதங்கள், 15. விடுகவிகள், 16. முப்பிரிவுப் பதங்கள்.

ஒலி, எழுத்து, கருத்து பேதங்களை மேற்கண்ட சித்திரப்பலகைகள் விளக்குவனவாகும். மேற்கண்ட 1 முதல் 13 இனப்படிப் பதங்களைச் சேர்த்தும், பிரித்தும் தேவைக்கு ஏற்றபடி அடுக்கி விளையாடக் கூடிய வார்த்தைகள் அடங்கிய பெட்டிகள் ஒரு இனத்திற்கு ஒன்றாக 13 இனங்களுக்கும் 13 பெட்டிகள் அடங்கிய சொற்கள் தேவை.

கணிதம்

1. மணிச்சட்டம் (1—10) புதுமாதிரி.
2. மணிச்சட்டம் கூட்டல் முறை.
3. மணிச்சட்டம் கழித்தல் முறை.
4. பத்து ஒன்று விளக்கும் மணிப் பெட்டி.
5. நூறு பத்து ஒன்று காட்டும் பெட்டி.
6. மாண்டிஸாரி முறைப்படி ஆயிரம், நூறு, பத்து, ஒன்று காட்டும் கன வடிவக்கட்டை மணிகளால் ஆனது.
7. எண் (நம்பர்) (சைகிள்) சக்கரம்-தாயக்கட்டைகள்.

கூட்டல் கழித்தல் கணித விளையாட்டுக்களுக்கு ஏற்ற சித்திரப்பலகைகள்.

1. ஏணி - 20 படிகள். 2. கட்டம் 25 சதுரங்கள். 3. கடிகாரக் காலண்டர் 30 இடங்கள். 4. மலை உச்சிக்கு வழி 50 படிகள். 5. கட்டம் 55 படிகள். 6. கோபுர வடிவம் 55 படிகள். 7.

அடுக்குத் தீபாராதனை 60 தீபங்கள். 8. தீபஸ்தம்பம் 80 படிகள். 9. படிச்சுருள் 100 இடங்கள் (சுற்றிச் சுற்றிச்செல்லும் குகை). 10. சூரியக்கோட்டை - 108 வளையங்கள்.

2, 3, 4 பேர் சேர்ந்து விளையாடலாம். ஒவ்வொரு கோஷ்டிக்கும் 4 சோழிகள், ஆளுக்கு ஒரு நிறக்காய் வீதம் தேவை. கீழிருந்து மேலே செல்லுவது கூட்டல்—மேலிருந்து கீழிறங்கி வருவது கழித்தல்.

11. கோலி ஆட்டப் பலகைகள்.

12. பின்னங்களாலான கோபுர வரிசைகள்; கனப்பந்து: (சில்லுப்பந்து ஆட்டம் போன்றது).

மற்றும் கஜக்கோல், 5 அடி நாடா, 100 அடி நாடா, ஒரு சதுர அடித் தகடு, (ஒரு பக்கம் 144 சதுர அங்குலங்களாகப் பிரித்தது – இவை தேவை.)

பொது அறிவு

1. தபால் கார்டு அளவுள்ள படங்களைச் செருகி வைக்கக்கூடிய ஏற்பாடு அமைந்த ஓட்டுப் பலகைகள்.

2. தேசப்படங்களில் ஆங்காங்கு செருகக் கூடிய காட்சிப் படங்கள்.

3. தேசப்படங்கள்.

4. யாத்திரை சம்பந்தமான படக் காட்சிப் பெட்டிகள். (உ. ம்.) காசி இராமேஸ்வரம்.

5. ஜீவிய சரித்திரக் கதை சம்பந்தமான படக்காட்சிப் பெட்டிகள், அட்டைகள், (உ. ம்.) புத்தர், சிவாஜி, மகாத்மா காந்தி.

6. கதை சம்பந்தமான படக்காட்சி - தொங்கவிடும் படங்கள்.

7. அகில பாரதம் விளக்கும் தேசப் படங்கள்.

புராதன இந்திய நாகரீகம் - கீழ் மேல் நாடுகளுக்குப் பரவிய விருத்தாந்தம் காட்டும் படங்கள்.

இராமாயண கால இந்தியா.

ஆதிசங்கரர் யாத்திரையும் ஸ்தாபித்த மடங்களும்.

8. தலைக்காவேரி முதல் காவிரிப்பூம் பட்டினச் சங்கமம் வரை காவேரியாற்றின் சுயசரிதைப் படங்கள்.

விளையாடுமிடம்

ஏணி சருக்கு மரம்—செங்கல் சிமிட்டியினால் அமைத்துக் கொள்ளக் கூடியது. ஆடும் குதிரை, படகு, வாத்து, அன்னப் பட்சி, ராட்டினம்—4, 6 பேர் உட்கார்ந்து கொள்ளக்கூடியது. ஊஞ்சல், சிறுவர் தொட்டில் முதலியன - பந்துகள், கிட்டிகள், வளையங்கள், சக்கரங்கள், மர உருண்டைகள் முதலியன.

சிறுவர் விளையாட்டுச் சாமான்கள்

சக்கரங்கள் அமைத்த மோட்டார், ரயில், கப்பல், ஏரோப்ளேன் (இரும்பு, தகரம், மரம்), வீட்டு மிருகங்கள், வன விலங்குகள், பக்ஷி வகைகள் (ரப்பர், ஒட்டுப் பலகை, பேப்பர் மாச்சி), மரப் பாச்சி பொம்மைகள், மரச்சாமான்கள், பித்தளை விளையாட்டுச் சாமான்கள்-மண் பொம்மைகள், கண் கட்டும் சிறு குட்டைகள் முதலியன.

சிறுவர் கைத்தொழில் சம்பந்தமான உபகரணங்கள்.

முக்கியமாக இப்பிரிவினைக்கு ஏற்ற சாதனங்கள் அந்தந்த ஊர்களில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களைப் பொறுத்தவையாகும். காகிதம் செய்தல் காகித வேலை (மடித்தல், கத்தரித்தல்,

ஒட்டுதல், பின்னுதல் முதலியன), அட்டை வேலை, களிமண் வேலை, ஈச்சம் ஓலை, பனை ஓலை, கோரை, கொருக்குத் தட்டை, தென்னை நார், மூங்கிற் சிம்பு, ஒட்டுப் பலகைகளைக் கொண்ட பலவித சாமான்கள், வீணாகப் போகும் பொருள்களை அழகுபெற அமைக்கும் நேர்த்தியானவேலைகள்.

ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனிப் பட்டறை அமைத்து ஒவ்வொன்றிலும் ஆரம்பம் முதல் பூராவாகக் கற்றுத் தேர்ச்சிபெறுவது சிறந்த ஏற்பாடு ஆகும். மேலும் வாழ்க்கை சம்பவத் திட்டங்களுக்கு அனுகுணமான கை வேலைகளை அனுஷ்டிக்கவும், தேவையான சாதனங்களை அந்தந்த ஊரிலேயே தேடிக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

(உ. ம்.) பாப்பாவின் வீடு, செங்கல் சூளை, உடை, ஆகாரப் பொருள்கள், தபாலாபீஸ், விளக்கும் வெளிச்சமும், கால் நடை பராமரிப்பு, வன மகோற்சவம், ரயில் பிரயாணம், மகாத்மா காந்தி ஞாபக நாள் கொண்டாட்டம் முதலியன.

முடிவுரை:

வேண்டுகோள்.

ஆக்கல் சக்தி, கிரியா சக்தி கொண்ட இளம் பிள்ளைகள் தேகம், மனம், உள்ளம் அகன்ற தாமரைப் புஷ்பம் போல் மலரவேண்டும். பள்ளிக்கூடம் சக்தி ஸ்வரூபங்களை வளர்க்கும் கோயில் ஆகும். அன்பு மிக்க கனதனவான்களே! குழந்தைகள் படிக்க, நடிக்க, ஓடியாடி விளையாட காய் கனிச் செடிகளைப் பயிரிடப் போதுமான இடம் கொடுத்து உதவுங்கள்.

பக்திகொண்ட கோயில் தர்மகர்த்தாக்களே! முக்கிய திருவிழாக்காலங்களில் ஆண்டவனுக்கு அபிஷேகம், நிவேதனம் செய்யும் நற்பண்டங்களை (பால், பழம், பஞ்சாமிர்தம், பொங்கல், சர்க்கரைப் பொங்கல், தயிர்ச் சாதம், லட்டு, வடை, தோசை, ரொட்டி, சுண்டல் முதலியவைகளில் ஒரு சிறு பகுதியைப் பள்ளிக் குழந்தைகளுக்குக் கொடுத்து உதவுங்கள்.

சமூக நலனுக்காக அலுப்பு சலிப்பு இல்லாமல் உழைக்கும் உழைப்பாளிகளே! உங்கள் கையினால் செய்த விளையாட்டுப் பண்டம் ஒன்று கொடுத்து உதவுங்கள்.

மக்கள் செல்வங்களைப் பெற்றெடுத்த மகா ஜனங்களே! உங்கள் வீட்டு விசேஷ தினங்களில் பள்ளிக் குழந்தைகளுக்கு ஏதாவது தின்பண்டம், விளையாட்டுச் சாமான், சிலேட்டுப் பலகை முதலியன கொடுத்து உதவுங்கள்.

கடவுள் அனைவரையும் காப்பாராக!

எகோ (ECHO)

[Educational Echo-வின் நவம்பர் வெளியீடு]

ஆஃப்ரிக்க நாட்டு ஆசிரியர்தலைவர்களும் அரசியல்உத்தியோகஸ்தர்களும், நியாமி மகாநாட்டில் ஆசிரியர்நிலையைப்பற்றி ஆராய்ந்து விவாதித்தல்

நைஜர் நாட்டிலுள்ள நியாமி நகரில் செப்டெம்பர் 9–14–இல், 30 ஆஃப்ரிக்க நாடுகளைச் சார்ந்த ஆசிரியர்சங்கங்களின் பிரதிநிதிகளும் அரசியல்உத்தியோகஸ்தர்களும் ஒன்றுகூடி, தனிச்சிறப்பு வாய்ந்ததோர் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அவ்வாராய்ச்சி ஆஃப்ரிக்காவிலுள்ள ஆசிரியர்களின் நிலையை முன்னேற்றவேண்டும் என்னும் குறிக்கோளைக் கொண்ட WCOTP–யின் புதிய திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய திட்டவாராய்ச்சியில் ஆசிரியர்சங்கப்பிரதிநிதிகளும் அரசியலைச் சார்ந்தவரும் ஒன்றுகூடி ஆராய்வது இதுவே முதல்தடவையாகும்.

ஒவ்வொருநாட்டிலுள்ள ஆசிரியர்நிலையையும் உயர்த்துதற்காகச் சிறிதுசிறிதாக மேற்கொள்ளுந் திட்டமொன்றனை வகுப்பதே இக்கூட்டத்தின் நோக்கமாகும். அங்குக் கூடியிருந்தோர் அனைவரும் தம் நாட்டு ஆசிரியர்களின் பொருளாதார சமூக உத்தியோகநிலைகளை உயர்த்துவதைப்பற்றி ஆராய்ந்து விவாதிக்க ஒருமனப்பட்டு உழைத்தனர். தனித்ததொரு செயல்முறையைப் பின்பற்றுதல் வேண்டும் என்று தம் அரசாங்கங்களை அரசியல்உத்தியோகஸ்தர்கள் வற்புறுத்துதல் இயலாது என்பதனை அனைவரும் உணர்ந்தனர். ஆயினும், அரசியல்உத்தியோகஸ்தர்களின் தேசீய கல்விப்பிரச்சினைகளைப்பற்றிய அறிவு ஆசிரியர்களின் கருத்திற்கு ஒத்திருப்பதனுல், அவ்வரசியல்அதிகாரிகள் அளிக்கும் அறிவுரைகளும், காட்டும் வழிகளும் ஆசிரியர்க்கு நன்கு பயன்படும் என்பது நன்கு உணரப்பட்டது.

அம் மகாநாட்டின் நிகழ்ச்சியின் பெரும்பான்மையான பகுதி தனித்தனித்தொகுதியினரைக் கொண்ட சிறுகமிஷன்களால் செய்யப்பட்டது. பொருளாதாரம், சமூகம், தொழில்முறை என்னும் மூவகை ஆசிரியர்நிலைகளைப்பற்றி ஆராய்தற்கு ஒவ்வொருநாள் தனித்தனித் தொகுதி ஒதுக்கப்பட்டது. கமிஷன்களில் கலந்துகொண்டோர் அந் நிலைகளின் முக்கியப்பகுதிகளை அறிந்து, ஆசிரியர்நிலைகளைப் பாதிக்கும் சமூகத்தொகுதிகளோடு தொடர்புபடுத்தி ஆராய்ந்தனர். இம் முறையை யொட்டித் தம்தம் நாட்டு நிலைக்கு ஏற்றவாறு தனித்தனிச்செயல்முறைகளை அவர்கள் வகுத்துக்கொண்டனர். அம் முறை ஆசிரியர்சங்கங்களின்மூலம் உழைக்கும் ஆசிரியர்கள் அரசியல்அதிகாரிகளின் கூட்டுறவைப் பெற்றுத் தம் நிலையை உயர்த்துதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தற்குப் பயன்படும்.

நியாமிநகர்மகாநாட்டில் கலந்துகொண்டவர்

உலகிலுள்ள புகழ்பெற்ற ஆசிரியர்சங்கங்களிலிருந்து அங்கு விஜயஞ்செய்திருந்த அறிஞர்பலர் அம்மகாநாட்டு விவாதங்களில் கலந்து-கொண்டு நன்கு நடைபெறுதற்குவேண்டிய அறிவுரை கூறினர். அவர்கள் கீழே குறிக்கப்படுவோர் ஆவர்: WCOPT-இன் தலைவர் ஸர் ரோனல்டு கௌல்டு (இங்கிலாந்து); WCOTP-இன் நிர்வாகக்கமிட்டி அங்கத்தினரான ஸ்ரீமதி சாரதா கால்டுவெல் (U.S.A.); WCOTP ஆஃபிரிக்க அலுவலகத்தின் டைரக்டர் E. பென்னட் காலி; WCOTP நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர் டெனிஸ் பாரஸ்டீர் (பிரான்ஸ்); 'ஆஃபிரிக்காவில் உள்ள ஆசிரியர்களின் நிலைமை என்பதைப்பற்றிய ஆராய்ச்சி (WCOTP)' என்னும் நூலின் ஆசிரியரான S. H. M. ஜோன்ஸ் (காம்பியா); காங்கோ குடியரசிலுள்ள லியோபோல்டுவில்லி மாகாணத்தில் முதற்கல்வியமைச்சரான பேஸில் மாபூஸா; கனடா ஆசிரியர் ஸமஷ்டியின் காரியதரிசி-பொக்கிஷதாரான ஜரால்டு நேசன்; WCOTP-இன் நிர்வாகக்கமிட்டியின் அங்கத்தினரான தியோபில் ரீச்னர் (ஸ்விட்ஸர்லாந்து).

அவ்வறிஞர்கள், கமிஷன்தலைவர்கள் பயன்படும் முறையில் விவாதித்து ஆராய்வதற்கு, வேண்டிய உதவிசெய்தனர்; அக் கூட்டத்தில் கலந்துகொள்வோரும் குழுவினரும் தம்தம் நாடுகளின் ஆசிரியரது நிலைக்குத் தொடர்புள்ள பிரச்சினைகளைப்பற்றிக் கலந்து பேசுதற்கு உரிய வாய்ப்பினை அளித்தனர். அவர்களுக்குப் பயன்படும்படி ஆங்கு வாசக-சாலையொன்று அமைக்கப்பட்டது. ஆசிரியர்நிலை, அதனோடு தொடர்-புள்ள பொருள்கள் முதலியவற்றைப்பற்றி ஆங்கிலத்திலும் பிரெஞ்சு-மொழியிலும் வெளியிடப்பெற்ற நூற்றுக்கு மேற்பட்ட பிரசுரங்கள் ஆங்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் பெரும்பாலன மேலே கூறிய அறிஞர்-களின் சங்கங்களிலிருந்து வந்தவையாகும். கமிஷன்கூட்டங்களில் விவாதிக்கப்படும் பொருள்களைப்பற்றிய விரிவான செய்திகளை அவ் வாசக-சாலையிலிருந்து பெறலாம். ஆஃப்ரிக்காவின் ஆசிரியரது நிலையை உயர்த்த வேண்டியது இன்றியமையாதது என்னும் விஷயம் 1960-இல் யுகாந்தா நாட்டில் கம்பாலா நகரில் WCOTP-ஆல் கூட்டப்பட்ட ஆஃபிரிக்க ஆசிரியர்சங்கத்தலைவர்களின் கூட்டத்தில் முதன்முதல் விவாதிக்கப்-பட்டது. ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கும் தொடர்ந்து தொழிலில்

வைத்துக்கொள்வதற்கும் தடையாக உள்ளது யாது என்பதனை ஆராய, ஆஃபிரிக்காவின் ஆசிரியர்நிலையைப்பற்றிய ஆராய்ச்சியொன்றனை WCOTP மேற்கொள்ளல் வேண்டும் என்று அக் கூட்டம் சிபாரிசு செய்தது.



அவ்வாராய்ச்சி, UNESCO, 'ஃபோர்டு ஃபௌண்டேஷன்' என்னும் இருநிலையங்களும் அளித்த பொருளுதவியால், 1961–இல் S. H. M. ஜோன்ஸ் என்பவரால் செய்து முடிக்கப்பட்டது. இப்பொழுது லண்டனில் காம்பியா கமிஷனராக உள்ள அவர் இருபத்தைந்துக்கு மேற்பட்ட ஆஃபிரிக்க நாடுகளில் சுற்றுப்பிரயாணம்செய்து அவ்வாராய்ச்சிநூலைத் தொகுத்துள்ளார். 1962–இல், ஆஃபிரிக்கநாட்டுக்கல்வியிலும் ஆசிரியர்-நிலையிலும் அக்கறை கொண்டுள்ள உலகமக்கள் ஆயிரத்துக்கு மேற்பட்ட-வருக்கு அவ்வாராய்ச்சிநூல் விநியோகிக்கப்பட்டது. அந்தஆராய்ச்சியைப்-பற்றி அறிஞர்கள் தெரிவித்த கருத்துக்களின் சுருக்கத்தை அடிப்படை-யாகக் கொண்டு நியாமி மகாநாடு அதனைக்குறித்த விவாதத்தை நடத்திற்று. அம் மகாநாட்டின் அறிக்கை UNESCO-விற்குச் சமர்ப்பிக்கப்-படும். அன்றியும், அம் மகாநாட்டில் செய்யப்படும் சிபாரிசுகள், WCOTP-இன் ஆஃபிரிக்க உறுப்புச்சங்கங்கள்முப்பதிலும் அமுலுக்குக் கொண்டு-வரப்படும்.

யூகோஸ்லேவியா நாட்டில் உள்ள ஸ்காப்பில் ஜி என்னுமிடத்தில்' 1963 ஜுலை 26–இல் ஏற்பட்ட பூகம்பத்தால் சேதம் மிக விளைந்தது. அதன் பயனாக, முன்பிருந்த 37 ஆரம்பப்பள்ளிக்கூடக்கட்டிடங்களும் அரை-குறையாகவோ முழுதுமோ அழித்துப் பாழாக்கப்பட்டன. அதனால், ஆங்-குள்ள 65,000 மாணக்கர் தம் கல்வியைத் தொடர்ந்து பெறுதற்கு வசதி இல்லாமல் வருந்துகின்றனர். அந் நாட்டுமக்கள் போதனைக்குரிய உபகரணங்கள், விஞ்ஞான ஆராய்ச்சிச்சாலைகள், புத்தகங்கள், பள்ளிக்கூடக் கட்டிடங்கள், உபந்யாசக்கூடங்கள் முதலியவற்றிற்கு வேண்டிய பொருளு-

தவியைச் செய்யுமாறு உலகமக்களை வேண்டிக்கொண்டுள்ளனர். அந்நாட்டுப் பள்ளிக்கூடங்களின் நாசத்தைப்பற்றி விவரமாக அந்நாட்டு

ஆசிரியர்கள் எழுதிய கடிதமொன்று, ரியோ நகரில் நடைபெற்ற WCOTP பிரதிநிதிகள் மகாநாட்டில் ஸர். ரோனல்டு கௌல்டு-ஆல் படிக்கப்பட்டது. "அந் நகரம் முழுதும் புதிதாக அமைக்கப்படுதல் வேண்டும். ஆயின், நாங்கள் மனம் தளரவில்லை. இவ் வேலையைத் தொடங்கி நடத்தி, உலகமக்களின் உதவியால் கூடிய விரைவில் அந் நகரத்தைப் புனருத்தாரணம் செய்துவிடுவோம் என்னும் உறுதியான நம்பிக்கை எங்களுக்குண்டு" என்பது அக் கடிதத்தில் குறிப்பிட்ட செய்தி. (இது அழிந்த ஆரம்பப்பள்ளியொன்றின் படம்).

ஸர்வதேச நாடுகள்:

"ஐ. நா.-வினைப்பற்றிய அறிவினைக் கல்விச்சாலைகளின்மூலம் உலகமுழுதும் பரப்புதல்" என்பது WCOTP-யின் 1964-ஆம் ஆண்டின் ஆராய்ச்சிப்பொருள். அதனைக்குறித்த செய்திகளடங்கிய பிரதிகள் 84 நாடுகளிலுள்ள 136 தேசீய உறுப்புச்சங்கங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று ஸெக்ரடரி-ஜனரலான வில்லியம் G. கார் அறிவித்துள்ளார். அப் பிரதியில் கேட்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடைகளைக் கொண்ட தேசீய அறிக்கைகள் ஆராயப்பட்டுச் சுருக்கமாக வெளியிடப்படும். அச் சுருக்கம், பாரிஸ் நகரில் 1964 ஆகஸ்டு மாதத்தில் UNESCO மாளிகையில் கூடவிருக்கும் WCOTP-மகாநாட்டின் பிரதிநிதிகள் அனைவர்க்கும் அனுப்பப்படும்.

உறுப்புச்சங்கங்கள் இப்போதுள்ள நிலையைப்பற்றி ஒன்றும் கூறாமல், நிலைமை எவ்வாறிருத்தல் வேண்டும் என்பதனைப்பற்றிய தம் கருத்துக்களை வெளியிடல்வேண்டும் என்று வேண்டிக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அவை கீழ்க்காணும் 4 வினாக்களுக்கு விடையளித்தல்வேண்டும்: பாடசாலைக்கல்வித்திட்டத்தில் ஐ.-நா. - வைப்பற்றிக் கற்பித்தல்வேண்டும் என்பதனை ஏன் சேர்த்தல்வேண்டும்? கற்பிக்கவேண்டுபவை யாவை? முறை யாது? அவற்றைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பெறவேண்டிய தகுதிகள் யாவை?

விடையெழுதுவோர், தங்கள் விடைகளை 2000 சொற்களுக்கு உட்படுத்தி எழுதி, 1964-பிப்ரவரி 29-க்குள் ஸெக்ரடரி-ஜனரலுக்கு அனுப்புதல்வேண்டும்.

'உறுப்புச்சங்கங்கள், தாம் செய்யும் ஆராய்ச்சியில், ஐ.நா.-வைப் பற்றித் தற்பொழுது கற்பிப்பதில் வெற்றிபெற்றுள்ள முறைகள் முதலிய-வற்றைப்பற்றிய முக்கியமான நல்ல செய்திகள் இருக்குமாயின், அவற்றை அவ்வறிக்கையின் பிற்சேர்பில் விவரித்து எடுத்துக்காட்டலாம்' என்று Dr. கார் வேண்டிக்கொண்டுள்ளார்.

Dr. கார், 1964-க்குரிய அவ்வாராய்ச்சித்திட்டத்தை ஒட்டிய அறிக்கையொன்றனை WCOTP-யின் சார்பாகத் தயாரித்து, UNESCO-விற்குச் சமர்ப்பித்துள்ளார். அதில் அத் திட்டத்திற்கும், 1964 UN-UNESCO அறிக்கைக்கும் உள்ள தொடர்பினைச் சுருக்கிக் கூறியுள்ளார்.

"பல ஆண்டுகளாக, ஐ. நா.-வைச் சார்ந்துள்ள அரசாங்கங்கள், தம் நாடுகளில் ஐ. நா.-வைப்பற்றிய அறிவைக் கல்விச்சாலைகளில் பரப்பும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளன. அதற்குரிய அறிக்கைகள் மிகப் பல, பள்ளிக்கூடத்தில் பயன்படுத்துதற்காக, ஐ. நா.-வாலும் பிற சங்கங்களாலும் தயாரிக்கப்பட்டு அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. ஆயினும், கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் மிகக்குறைந்த அளவில் அம் முறை மேற்கொள்ளப்பட்-டுள்ளது என்றே அறிக்கைகள் கூறுகின்றன. அதற்குக் காரணம் யாது? இடையூறுகள் யாவை? WCOTP தன் 1964-ஆராய்ச்சியில் இம் முக்கிய-மான வினக்களுக்கு விடைகாணும் என்று நம்புகின்றது. அவ்விடையூறு நிர்வாகத்திலுள்ளதா, அன்றி, சங்கத்திலுள்ளதா, அன்றி, தகர்த்தெறிய-வேண்டிய முக்கியத் தடையேதேனும் உளதா? இதுவே இத் துறையில் ஐ. நா.-வின் வருங்காலவேலையைச் சார்ந்த மிக முக்கியமான கேள்வி. இதற்கு ஏற்ற விடை அளிக்கத் தகுதியுடையோர் ஆசிரியர்களே. இத்துறை-யில் வேண்டிய பயிற்சி ஒருசிறிதும் ஆசிரியர்க்கு அளிக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்க செய்தி—என்று UNESCO-விற்கு WCOTP 1960-இல் அறிவித்துள்ளது. இந்த 3, 4 ஆண்டுகளில் திருப்தியை அளிக்கும் மாறுதல் ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இப்பொழுது, ICET என்னும் WCOTP-இன் சர்வதேச உறுப்புச்சங்கம் ஒத்துழைப்-பதனல், WCOTP-இன் 1964-ஆம் ஆண்டு ஆராய்ச்சியின் மூலம், ஆசிரியர்கல்வித்திட்டங்களில் எவையெவை செய்யப்படுதல் வேண்டும், எவையெவை செய்தல் இயலும் என்பனவற்றைப்பற்றி அழுத்தந்திருத்த-மான சிபாரிசுகளைச் செய்யமுடியும் என்று நம்பப்படுகின்றது"—என்பது அவ்வறிக்கையில் கண்ட செய்தி.

1964-ஆம் ஆண்டுத்திட்டத்தை Dr. கார், ரியோ டி ஜனிரோ நகரில் கூடிய 1963 பிரதிநிதிகள் மகாநாட்டில் வெளியிட்டார். அவருடைய சொற்பொழிவின் முழு அறிக்கையும் செப்டெம்பர்அக்டோபர் வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டது.

—— ——

இது 1964 UNICEF நாட்குறிப்புக்காலண்டரின் அட்டைப்படம்.

இதில் ஒவ்வொரு வாரத்துக்கும் ஒரு முழுப்பக்கம் விடப்பட்டுள்ளது. இடப்பக்கத்திலுள்ள பகுதியில் புகழ்பெற்ற ஓவியக்காரர்-ஒருவரால் வரையப்பட்ட—UNICEF புது வருஷ வாழ்த்துச் செய்தியைக் கொண்ட—முழுக்கலர்ப்படம் ஒன்று உளது. இதனை விற்றுப் பெறும் பொருள் ஐ. நா. குழந்தைகளுக்கும் தாய்மாருக்கும் உதவுவதற்குப் பயன்படுத்தப்படும். விலை 2 டாலர். பெறுமிடம்: The U. S. Committee for UNICEF, P. O. Box 2?, Church Street Station, New York 8, New York, U.S.A.

உடற்பயிற்சி போதனுமுறைத் துறையில், ICHPER மூன்றுவித ஆராய்ச்சிகளைச் செய்துள்ளது. 1961-இல் WCOTPயும் UNESCOவும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி அம் மூன்றும் UNESCO டைரக்டர்-ஜனரலான 'ரேனே மாஹ்யு' என்பவரிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

அத் துறையில் சில வினுக்கள் வெளியிடப்பட்டு, ஏறத்தாழ 50 நாடுகளிலுள்ள தேர்ந்தெடுத்த அறிஞர்களுக்கு அனுப்பப்பட்டன. அவ்வறிஞர்கள ICHPER நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர்கள், உறுப்புச்-சங்கங்களிலுள்ள உத்தியோகஸ்தர்கள், போதனுமுறைக்கல்விநிலையங்-களிலுள்ள பேரறிஞர்கள் முதலியோர் ஆவர். அவர்கள் அவ் வினுக்களுக்கு அளித்த விடைகளை ஆதாரமாகக் கொண்டு "பாடத்திட்டத்தில் உடற்-பயிற்சியும் விளையாட்டுக்களும்", "உடற்பயிற்சிக்கு வேண்டிய ஆசிரியர்-பயிற்சி", "உடற்பயிற்சியாசிரியரின் நிலை" என்னும் இம் மூன்று விஷ-யங்களைப்பற்றி ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன.

அவ்வறிக்கைகளுக்கு ICHER தலைவர் 'டோராதி S ஐன்ஸ்வர்த்' என்பாரும், ICHPER ஸெக்ரடரி-ஜனரல் கார்ல் A. ட்ரோஸ்டர் Jr., என்-பாரும் அளித்த அணிந்துரையைக்கொண்டு, 1960-இல் ஆம்ஸ்டர்டாமில் நிகழ்ந்த WCOT பிரதிநிதிகள் மகாநாட்டிலும், ICHPER காங்கிரஸிலும் செய்யப்பட்ட தீர்மானங்களை ஒட்டி இவ்வாராய்ச்சிகள் செய்யப்பட்டன. இவற்றை ஒட்டி இன்னும் நாலைந்து ஆண்டுகள் தொடர்ந்து ஆராய்ச்சிகள் செய்தல் வேண்டும் என்று ICHPER திட்டமிட்டுள்ளது.

அவற்றுள் ஒவ்வொரு அறிக்கையின் விலை 1·50 டாலர். அவை கிடைக்குமிடம்: The International Council on Health, Physical Education and Recreation, 1201, Sixteenth Street, N. W., Washington D.C., U.S.A.

ஆசிரியர்தொழிலில் உள்ள மற்றைப்பாடங்களின் ஒழுங்கினுக்கும் உடற்பயிற்சிக்கும் இடையே உள்ள தொடர்பிணைக்குறித்து அக் கூட்டங்களில் வெளியிடப்பட்ட கவலையின் அடியாக, இவ்வாராய்ச்சி பிறந்தது. 104 பக்கமுள்ள இந்த அறிக்கை உடற்பயிற்சியாசிரியர்களின் தொழில்முறை, பொருளாதாரம், தேசீய அந்தஸ்து இவற்றைப்பற்றிய சுருக்கமாகும். இவ் வினாத்தாளுக்கு விடையளித்த சங்கங்களின் பெயர்கள், அவற்றின் குறிக்கோள்களோடு கல்வித்துறையில் பங்கெடுத்துக்கொண்ட வகையையும் ஒட்டி, முறையாகக் குறிக்கப்பட்டுள்ளன.



"ஒவ்வொரு பாடசாலையும் தன் மாணுக்கர்க்கு இன்றியமையாத உடற்பயிற்சித்திட்டத்தை வகுத்து அமைத்தல்வேண்டும்" என்றும், "ஆசிரியர்கள் தங்கள் பொறுப்புக்களைச் செய்து முடிக்க ஏற்ற பயிற்சி அளிக்கப்படல் வேண்டும்" என்றும் முடிவுசெய்யப்பட்ட தீர்மானத்தை ஒட்டி, இவ் விரண்டாவது ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. 50 நாடுகளில் மாணுக்கர் உடற்பயிற்சியாசிரியர் ஆதற்கு வேண்டிய பாடத்திட்டத்தின் சுருக்கமான விவரணமும், அளிக்கப்பட்ட பயிற்சியும் பட்டமும் அதில் குறிக்கப்பட்டுள்ளன.



இவ்வாராய்ச்சி 164 பக்கம் கொண்டது; இப்பொருளைப்பற்றிய ஆராய்ச்சி இதுவே முதலதாகும்; இது எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் நடைமுறையில் உள்ள உடற்பயிற்சிச்-செயல்கள், அவற்றிற்குரிய நேரம், வாய்ப்புக்கள் முதலியவற்றின் சுருக்கம். ஒவ்வொரு நாட்டிலும் உடற்பயிற்சிக்-கல்வியின் முக்கிய நோக்கங்கள், அவற்றின் போக்கு அத் திட்டங்களை முன்-னேற்றுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்குஞ் சிக்கல்கள் ஆகியவை இதில் குறிக்கப்பட்டுள்ளன.



ஆசியா :

ஆசியாவில் உள்ள ஆசிரியர்களின் அந்தஸ்துபற்றி விடுத்த வினாக்களுக்கு இருபது ஆசிய நாடுகளில் உள்ள அறிஞர்கள் விடையெழுதி அனுப்பினர். அதனை அடிப்படையாகக் கொண்டு, புது டெல்லியில், சென்ற வஸந்த ருதுவில் (ஜுன்-ஜுலை), நிபுணர்கூட்டமொன்று ஆராய்ந்து

சில சிபாரிசுகளைச் செய்தது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு WCOTP ஆராய்ந்து முடிவுசெய்த இறுதியறிக்கை பூர்த்திசெய்யப்பட்டு, UNESCO-வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அச்சடித்த அவ்வறிக்கையின் பிரதிகள் 1964-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் விநியோகத்துக்குத் தயாராயிருக்கும்.

ஆசிரியர்களின் கல்வி பொருளாதாரம் தொழில்முறை ஆகிய-வற்றின் நிலைகள், பொதுக்காரியங்களில் ஆசிரியர்கள் ஈடுபடுதற்கு வேண்டிய உரிமை, அவர்கள்பால் பொதுமக்கள் கொண்ட மதிப்பு ஆகியவை ஆங்கு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

ஆஸ்திரேலியா, ப்ருநெய், பர்மா, இலங்கை, சைனு, ஹாங்காங், இந்தியா, இந்தொனேஷியா, ஈரான், இஸ்ரேல், ஜப்பான், கொரியா, மலேயா, நியூஸீலாந்து, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்-லாந்து, வியட்-நாம் என்னும் நாடுகளில் உள்ள ஆசிரியர்நிலைகளைப்-பற்றியது அவ்வாராய்ச்சி.

அவ்வாராய்ச்சிக்கு அடிப்படையாக இருந்த விஞப்பத்திரம் ஆசிய நாடுகளில் உள்ள WCOTP உறுப்புச்சங்கங்கள், நட்புச்சங்கங்கள், கல்வி-யமைச்சர்கள், கல்வித்துறையிலும் கல்வியமைச்சுத்துறையிலும் உள்ள அதிகாரிகள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டது.

ஆசிரியர்களின் சமூக பொருளரதார தொழில்நிலைகளைப்பற்றிய இவ்வாராய்ச்சி செய்யப்படல்வேண்டும் என்று 1960-இல் மலேயா கோலாலம்பூரில் கூடிய WCOTP ஆசிய பிரதேச மகாநாட்டுக்கூட்டத்தி-லும், ஆசியாவின் கல்விக்கொள்கை ஆராய்ச்சிக்காக அமைக்கப்பட்ட பிரதேச கவுன்சில்-கூட்டத்திலும் முதன்முதல் சிபாரிசு செய்யப்பட்டது.

கிழக்குப் பாகிஸ்தானில் வெள்ளத்தாலும் புயற்காற்றினுலும் கஷ்டத்துக்கும் பொருள்நஷ்டத்துக்கும் ஆளான ஆசிரியர்களுக்கு உதவும்பொருட்டு, WCOTP ஜுலை 22-இல், அகில பாகிஸ்தான் ஆசிரியர் ஸமஷ்டிக்குச் சிறுமானியத்தொகையை அனுப்பியுள்ளது.

Dr. மால்காம் எஸ். ஆதிசேஷய்யா (இந்தியா), UNESCO-விற்கு 'டெபுடி டைரக்டர்-ஜனரலாக' நியமிக்கப்பட்டுள்ளார்; 1954-முதல் 'அஸிஸ்டெண்ட் டைரக்டர்-ஜனர'லாகத் தொண்டுசெய்துவந்துள்ளார். அவர் 1910-இல் சென்னையில் பிறந்தார்; சென்னைப் பல்கலைக்கழகத்தில் பயின்றார்; இலண்டன் பொருளியல்கலைக்கூடத்திலும், 'கேம்பிரிட்ஜ் கிங்ஸ் காலேஜி'லும் பயின்று பட்டம் பெற்றார். 1931-முதல் 1946-வரை கல்கத்தா, சென்னைப் பல்கலைக்கழகங்களில் பொருளியல்நூலைக் கற்பிக்கும் பேராசிரியராகத் தொண்டாற்றினர். 1948-இல் UNESCO-காரியாலயத்-தில் சேருதற்குமுன், ஈராண்டு 'World University Service'-இன் 'அஸோஸியேட் ஸெக்ரடரி-ஜனர'லாகத் தொண்டாற்றினர்.

அரபு நாடுகள் :

அரபு ஆசிரியர் ஸமஷ்டியின் ஸெக்ரடரி-ஜெனரலான மகமத் சயித் அல்-ஆர்யான் என்பவர், ஆசிரியர்சங்கங்கள் நடைபெறும் முறையையும் அவற்றின்

காரியங்களையும் அறிந்துகொள்ளுவதற்காக, அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலும் கானடாவிலும் மூன்றுமாதம் சுற்றுப்பிரயாணம்செய்வதற்கு வந்துள்ளார். அவர் புகழ்பெற்ற நூலாசிரியரும் பேரறிஞரும் ஆவார். முன்பு U,A.R.-இல் உதவிக்கல்வியமைச்சராகத் தொண்டாற்றியுள்ளார். 1962-ஆகஸ்டில் லெபனன் நகரில் நடைபெற்ற அரபு ஆசிரியர் ஸமஷ்டி மகாநாட்டிற்கு WCOTP-யின் பிரதிநிதிகளாகச் சென்றவர்கள், அவ்வறிஞரை U.S.A.-விற்கு வரவேண்டுமென்று, ஸெக்ரடரி-ஜெனரல் வில்லியம் G. கார் என்பவரின் சார்பாக, வேண்டிக்கொண்டதனுல், இப்போது அவர் WCOTP-யின் விருந்தாளியாக வந்துள்ளார்.

ஐரோப்பா :

இங்கிலாந்தில் நவம்பர் **11-16**-இல் தேசீயக் கல்விவாரம் கொண்டாடப்படும். அந்நாட்டு ஆசிரியர்சங்கம் (NUT), அறிஞர்கள் ஆற்றியுள்ள தொண்டுகள், கல்விப்பிரச்சினைகள், தற்காலக்கல்வியின் லட்சியம், இவற்றை இவ்வாரத்தில் மும்முரமாக விளம்பரப்படுத்தும். இத்தகைய கொண்டாட்டம் இதற்குமுன்பு இல்லை. இதனை வெற்றியுடன் நடத்துதற்கு நூற்றுக்குமேற்பட்ட ஒத்துழைப்புக்கமிட்டிகள் பணியாற்றுகின்றன. "இவ்வாரம்முழுதும் கல்வியைப்பற்றிய கருத்துக்களை நாடுமுழுதும் பரப்புவதே இத் திட்டத்தின் கருத்து" என்று NUT வெளியிடும் 'NUT NEWS' என்னும் பத்திரிகை கூறுகின்றது.

காஸா பிரதேசத்தில் கல்விஆரோக்கியத்திட்டங்களுக்காக, THE SWEDISH AGENCY FOR INTERNATIONAL ASSISTANCE (NIB) என்னும் ஸ்தாபனம் ஒரு மில்லியன் க்ரோனரை (டாலர் 192,000) மானியமாக அளித்துள்ளது. UNRWA நடத்திவரும் பெண்கள் தொடக்கப்பள்ளிகளில் குடும்பக்கலையிலும் குழந்தைவளர்ப்பிலும் பயிற்சியளித்தற்கும், ஆசிரியரை நியமித்தற்கும், அகதிகளாய் வந்துள்ள தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் வேண்டிய மருத்துவவுதவிசெய்தற்கும் அத் தொகை பயன்படுத்தப்படும்.

லெபனன் நகரில் தொழிற்கலைக்கூடமொன்றும் ஆசிரியர் போதனுமுறைக்கலாசாலையொன்றும் நிறுவுதற்காக அந்த ஸ்தாபனமே சென்ற ஆண்டில் 800,000 டாலர் பொருளுதவி செய்துள்ளது.

அமெரிக்காஸ் :

அமெரிக்காஸ்முழுதும் உள்ள மக்களின் கல்வித்தரத்தை உயர்த்துதற்கு என்று பத்தாண்டு இயக்கத்தை (Alliance for progress campaign) தொடங்குதற்காக ஆகஸ்டு முதல்வாரத்தில் கொலம்பியாவிலுள்ள போகடா நகரில் இருபது அமெரிக்கக் குடியரசு நாட்டுக்கல்வியமைச்சர்கள் ஒன்றுகூடி ஆலோசித்தனர். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள கல்வியின்

நிலையை அறிவிக்கும் அறிக்கைகளை உட்கொண்ட அம் மகாநாட்டு மூல சித்தாந்தங்கள் அந் நாடுளின் கல்விநிலையை ஓரளவு அறிவிக்கப் பயன்பட்டன. அவை, முன்னேற்றத்திற்குரிய திட்டங்களை வகுப்பதற்கு, அடிப்படையாக இருந்து உதவும். இம் மகாநாட்டினைக் கூட்ட முதல்வராக இருக்கும் டாக்டர் ஜைம் போஸடா (Assistant Secretary of the OAS for Cultural, Scientific and Informational Affairs) என்பவர், இம் முன்னேற்றக்கூட்டுறவை 1961-இல் உருகுவே நாட்டில் தொடக்கிவைத்த வெளிநாட்டுமந்திரிகள்மகாநாட்டிற்கு ஈடான பெருமை இதற்கு உண்டு என்று உரைத்தார்.

அந் நாடுகளில் படிக்கும் வயதுவந்த குழந்தைகள் அனைவர்க்கும் குறைந்தது ஆறு ஆண்டு இலவசக்கட்டாயக்கல்வி அளித்தல் வேண்டும் என்பது 1970-க்குள் அந்த ஸ்தாபனம் அடைய எண்ணியிருக்கும் குறிக்கோள்களுள் ஒன்றாகும். இதன் பயனாக 1970-இல் 45 மிலியன் குழந்தைகள் கல்விகற்றல் வேண்டும். (1960-இல் கற்ற குழந்தைகளின் தொகை 26 மிலியன்). அன்றியும், அந் நாடுகளிலுள்ள 50 மிலியன் எழுதப்படிக்கத்தெரியாத மக்கள் பயனும் பண்பாடும் உள்ள வாழ்க்கையை நடத்தும்படி செய்ய, முதியோர்கல்வித்திட்டவியக்கமொன்றனையும் தொடங்குவது அக் குறிக்கோள்களுள் ஒன்றாகும்

ஸ்ரீமதி ரோஸேரியோ டி ப்ரிட் (பனாமா), திரு. ரமான் ராங்கி (கொலம்பியா), திரு. ராபர்டோ நைனோ (கொலம்பியா)-ஆகிய மூவரும் WCOTP-இன் பிரதிநிதிகளாக அக் கூட்டத்தில் பங்கெடுத்துக்கொள்வர்.

———

கானடா தேசத்து மக்கள்வாழ்க்கை, பூகோளம், சரித்திரம், கலைகள் முதலியவற்றைப்பற்றி எழுதப்பட்ட புஸ்தகங்களை அறிவிக்கும் 16 பக்கங் கொண்ட இந்த அழகிய சிறுநூல், கானடா ஆசிரியர் ஸமஷ்டியால் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் முதற்பிரதிகள் இவ்வாண்டுக்கோடையில் ரியோ நகரில் கூடிய WCOTP மகாநாட்டில் விநியோகிக்கப்பட்டன. CTF, 444 Macharen Street, Ottawa, 4, Ontario, Canada-என்னும் விலாஸத்திற்கு எழுதினால், அச் சிறுநூல் இலவசமாக அனுப்பப்படும்.



பிற நாடுகளிலுள்ள ஆசிரியர் கானடாநாட்டைப்பற்றிய செய்திகளை அறிய முடிவதில்லை என்று கூறிவேண்டிக்கொண்டதன் பயனாக, இந் நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டுளது.

———

டாக்டர் பால்டுவின் லீ (WCOTP-யின் Director of Information Services) ரியோ மகாநாட்டிலிருந்து திரும்பிவருங்கால், தம் காரியாலயத்தின் சார்பில், ஜமைகா நாட்டிலுள்ள கிங்க்ஸ்டன் நகரத்திற்கு விஜயஞ்செய்தார். அப்போது அங்கு ஜமைகா ஆசிரியர்சங்கத்தின் கவுன்சில்-கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

JTU-வின் தலைவர் R. C. தவர்ஸ், புதிதாக உரிமைபெற்ற அந் நாட்டின் ஆசிரியர்சங்கங்களை ஒன்றுபடுத்தும் முயற்சியில் குறுக்கிடும் இடையூறுகளை விவரித்துக் கூறினர். JETA-இன் தலைவரான A. W. போவல் என்பவர், இன்னும் ஓராண்டுக்காலத்தில் எல்லாச்சங்கங்களும் ஒன்றுபட்டு, ஒரே 'யூனியனுக' அமையும் என்னும் நம்பிக்கையைத் தெரிவித்துள்ளார்.

———

நவம்பர் 17-30-இல், 'பூர்டோ ரிகோ' என்னும் நாட்டிலுள்ள ஸான் ஜுவான் நகரில், ஆசிரியர்நலத்தைப்பற்றி கருத்தரங்கொன்று WCOTP-யால் நடத்தப்பெறும். 'லத்தீன் அமெரிக்கா'விலுள்ள பிரதிநிதிகள் அக் கருத்தரங்கினுக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

'பெரு' நாட்டில் லிமா நகரில் 1962-ஜூலையில், ஆசிரியர்களுக்கு வீடுகட்டிக்கொடுக்குந் திட்டத்தைப்பற்றிய சிறப்புக்கருத்தரங்கு WCOTP-யால் கூட்டப்பெற்றது. அக் கருத்தரங்கு தொடர்ந்து நடத்தப்படவேண்டும் என்று சிபாரிசுசெய்ததன் பயனுக, இக் கூட்டம் கூட்டப்பெற்றது. ரியோ டி ஜனிரோவில் நடைபெற்ற பிரதிநிதிகள்மகாநாட்டில் இது ஆமோதிக்கப்பட்டது. ஆசிரியர்சங்கங்களின் பிற பொதுநலச்செயல்களையும் இதில் சேர்த்துக்கொள்ளலாம் என்பதும் தீர்மானிக்கப்பட்டது.

அக் கருத்தரங்கின் முழுவறிக்கை இனிவரும் Education Echo-வெளியீட்டில் வெளியிடப்பெறும்.

———